உ

சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையிலுள்ள தலங்கள்

தேவாரப் பாடல்களும் தல வரலாறுகளும்

தொகுத்தவர் :
புலவர். ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.

வெளியிடுவோர் :
திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்
(மேயர் & கம்பெனி உரிமையாளர்)
திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்
(K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர்)
டாக்டர் C. P. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(திருவல்லிக்கேணி, சென்னை-5.)

வாழ்த்தி வழியனுப்புபவர்கள் :
மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

20—7—1964

கிடைக்குமிடம் :

தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

41, உஸ்மான் ரோடு

தி. நகர், : : சென்னை-17.

உ

சிவமயம்

சோழநாட்டுக் காவிரிக்கு வடகரையிலுள்ள தலங்கள்

[தேவாரப் பாடல்களும் தல வரலாறுகளும்]

தொகுத்தவர்
புலவர். ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

வெளியிடுவோர் :
திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள்
(K. குப்புசாமி முதலியார் & கம்பனி உரிமையாளர்)

திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள்
(மேயர் & கம்பெனி உரிமையாளர்)

Dr. C. P. பாலசுப்பிரமணியம் (திருவல்லிக்கேணி)

தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை-17.
20—7—1964.

அச்சிட்டோர் அமுர்தா அச்சகம் சென்னை-24.

குருபாதம்

முகவுரை.

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.
— திருஞானசம்பந்தர்.

நமது புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலும், இலங்கையிலும் எண்ணில்லாத திருக்கோயில்கள் உள்ளன. அவற்றைப் பொதுவாக 1008 சிவாலயங்கள் என்று தொகுத்துக் கூறுவர் ஆன்றோர். அவற்றுள் நமது தெய்வச் சைவர் செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்திகளான நால்வர் பெருமக்களால் பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 274 என்பர். அவை சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 63, தென்கரையில் 127, பாண்டி நாட்டில் 14, சேரநாட்டில் (மலைநாடு) 1, கொங்கு நாட்டில் 7, நடு நாட்டில் 22, தொண்டை நாட்டில் 32, துளுவ நாட்டில் 1, ஈழ நாட்டில் 2, வடநாட்டில் 5 ஆக விளங்குகின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுளப் பாங்கின் வண்ணம் நமது சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் சென்னையிலும், சென்னைக்கு அண்மையிலும், உள்ள சிவநேசச் செல்வர்கள் பலரும், ஐந்து ஆண்டுகளாக மாதந்தோறும் முதல் அல்லது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் தொண்டை நாட்டுத் தலங்கள் 32க்கும், நடுநாட்டுத் தலங்கள் 22க்கும், மலை நாட்டுத்தலம் 1க்கும், பாண்டி நாட்டுத் தலங்கள் 14க்கும் கொங்கு நாட்டுத் தலங்கள் 7க்கும் சென்று வழிபாடும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தி நிறைவு செய்து மகிழ்ச்சியுற்றனர்.

இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுளக் கருத்தின்படி, அன்பர்கள் பலரும் சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையிலுள்ள 31 தலங்களையும், இவற்றை சூழ்ந்துள்ள மற்றும் சில திருக்கோயில்களையும், சென்று தரிசித்து வர நமது பிரசார நிலையத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. ஒரு பேருந்தூர்தியில் சுமார் 60 அன்பர்கள் இவ்வழிபாட்டு யாத்திரையில் கலந்து கொண்டு மகிழ்கின்றனர். 20—7—64 திங்கள் முதல் 27—7—64 திங்கள் முடிய இச்சோழ நாட்டு யாத்திரை நிகழ்கின்றது. இந்த யாத்திரையில் ஆங்காங்கு திரு. கே.

கமலக்கண்ணன் M.L.C., வித்துவான் திரு. S. சேதுசுப்பிர மணியப் பிள்ளை, வித்துவான் திரு. V. S. குருசாமி தேசிகர் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் M.A., திருவாசக மணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B.A. B.L., திரு மதி. வித்துவான் மீனுட்சி சுந்தர சிவை முதலியோர் சமய விரிவுரை நிகழ்த்வார்கள்.

இவ் வழிபாட்டு யாத்திரையில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படும்படி, நமது நிலையத்தின்பாற் பேரன்பும், பெரிதும் ஈடுபாடும் உடைய பெருமக்களான மேயர் கம்பெனி திரு. ஆர். மாசிலாமணி முதலியார், திரு. K. குப்புசாமி முதலியார் & கம்பெனி உரிமையாளர் திரு. K. C. நாகலிங்க முதலியார், டாக்டர் சி. பி. பாலசுப்பிரமணியம் ஆகிய மூவரும் சோழ நாட்டுத்தலங்கள் என்னும் இச்சிறு நூலைத் தமது செலவில் அச்சிட்டு அன்பர்களுக்கு மனமுவந்து இலவசமாக வழங்குகின்றூர்கள். இதன் பொருட்டு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் "திருக்கோயில்" இதழ் ஆசிரி யர் புலவர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L. அவர்கள் நமது வேண்டுகோளுக்கிணங்கிச் சிறந்த ஒரு சமயத்தொண்டு என்ற நோக்கத்துடன் இதனை மிகக் குறுகிய காலத்தில் பெரிதும் முயன்று, தொகுத்தும், தலவரலாறுகளை எழுதி யும் உதவினர்கள். இந்நூல் அச்சிடுங்கால் ஒப்பு நோக்கு தல் முதலிய சிறு தொண்டுகளைத் திரு கயப்பாக்கம். சோம சுந்தரம் செட்டியார் அவர்களும் ஆற்றினர்கள். சென்னை "அமுர்தா அச்சகத்தார்" விரைவில் அச்சிட்டுத்தந்தனர்.

மேற்குறித்த அன்பர்கட்கும், யாத்திரையில் சிவபுண்ணி யத்திற்குப் பாத்திரமாயுள்ள அன்பர்கட்கும், எல்லா நலங் களும் நிறைந்து இனிது பெருகுதல் வேண்டும் என ஸ்ரீ செந் தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவருளையும், மன மொழி மெய்களால் வழுத்தி வணங்குகின்றேன்.

வாழ்க வையகம்! வளர்க சிவநெறி !!

தருமபுர ஆதீன
சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் சாலை
தி. நகர், சென்னை-17.

இங்ஙனம்:
வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்.

34-1

உ

சிவமயம்

சோழநாட்டுக் காவிரிக்கு வடகரையிலுள்ள பாடல் பெற்ற தலங்கள்

1. கோயில் (சிதம்பரம்)

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. 5

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரபஞ்சமம் [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம தொல்வினையே. 1

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலம்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின்தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனையிசையாற் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருநேரிசை - பண் – கொல்லி [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா
வெறிக்குஞ்சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே. 1

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல்காண்பா னடியனேன் வந்தவாறே. 1

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம் - பண் - கொல்லி [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி
புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே. 2

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மானிலத்தே. 4

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 1

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 1

ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீள்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனோ. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் [6-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையி னகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்

கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1

மங்குல் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி னுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்கு மிடமறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 1

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார்

பண் – குறிஞ்சி [7-ம் திருமுறை]

மடித்தாடு மடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழு நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பாருரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊருரன் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே. 10

திருச்சிற்றம்பலம்

1. **சிதம்பரம்:** இத்தலம் 'கோயில்' எனக் காரண இடுகுறிப் பெயராகச் சிறப்பித்து வழங்கப் பெறும். தில்லை, பெரும்பற்றப் புலியூர் முதலிய வேறு பெயர்களும் இதற்கு உண்டு. உலகெங்கணும் உள்ள கலைஞர்களால் பெரிதும் வியந்து கொண்டாடப் பெறும் நடராஜப் பெருமான் சிறப்புற எழுந்தருளி விளங்கும் தலம் இதுவே.

நடராஜப் பெருமானுக்கு உரிய ஐந்து சபைகளுள், திருவாலங்காடு இரத்தின சபை; மதுரை இரசித சபை (வெள்ளியம்பலம்); திருநெல்வேலி தாமிரசபை; திருக்குற்றாலம் சித்திரசபை; சிதம்பரம் கனகசபை (பொன்னம்பலம்) எனப்படும்.

இவைகளே யன்றி, ஐந்து சபைகள் சிதம்பரத்திலும் கூட உண்டு. நடராஜப் பெருமான் இருக்கும் இடம் சிற்சபை; ஆயிரக்கால் மண்டபம் இராஜ சபை; சிற்சபைக்கு முன்னுல் உள்ளது கனக சபை; கொடிமரத்திற்கு அருகில் உள்ளது நிருத்த சபை; பேரம்பலம் என்பது தேவ சபை எனப் பெயர் பெறும்.

திருமூலட்டானேசுரர், உமையம்மை, முக்குறுணி விநாயகர், கற்பக விநாயகர், பாண்டிய நாயகம், சிவகாமியம்மை, நவலிங்கம், துர்க்கை முதலியன இங்கு மிகவும் சிறப்பாகத் திகழ்வன ஆகும்.

சிற்சபைக்குள் இறைவன் சகளம் (உருவம்) நிஷ்களம் (அருவம்) சகள நிஷ்களம் (உருவ அருவம்) என்னும் மூவகைத் திருமேனியுடன் எழுந்தருளியிருக்கின்ருர். சகளத் திருமேனி நடராஜர் திருவுருவம்; நிஷ்கள திருமேனி சிதம்பர இரகசியம்; சகள நிஷ்கள திருமேனி ஸ்படிக லிங்கம் (அழகிய திருச்சிற்றம்பலம் உடையார்). இவர்களேயன்றி இரத்தின சபாபதியாகிய மரகத நடராஜாவும், சுவர்ண காலபைரவரும் இங்குக் காட்சியளிக்கின்றனர்.

சேக்கிழார் சுவாமிகள் பேரம்பலம் திருவணுக்கன் திருவாயில், சிற்றம்பலம், திருக்களிற்றுப்படி என்பன குறித்துப் பெரிய புராணத்திற் பாடியுள்ளார். திருவணுக்கன் திருவாயில் இறைவன் ஆடும் இடத்திற்கு அருகில் உள்ளது. பேரம்பலம் சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ நாயகர்கள் எப்பொழுதும் எழுந்தருளியிருக்கும்

இடம். சிற்றம்பலம் கூத்துடையான் ஆகிய சபாநாயகர் எழுந்தருளியிருப்பது. திருக்களிற்றுப்படி யானைத்துதிக்கை வடிவாய் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்து படிகள். இவ்வைந்தையும் கடந்து கூத்தப்பெருமான் வீற்றிருக்கின்றார். யானைத் துதிக்கை பிரணவத்தையும், ஐந்து படிகள் திருவைந்தெழுத்தையும் குறிக்கும் திருக்களிற்றுப் படியார் என்னும் 'நூற் பெயர்க்' காரணம் இங்கு அறியத் தகும்.

வைணவர்கள் இதனைத் திருச்சித்திர கூடம் என வழங்குவர். பெருமாள் தில்லைக் கோவிந்தராஜர் எனவும், தாயார் புண்டரீகவல்லி எனவும் பெயர் பெறுவர். பெருமாள் திருமொழி பெரிய திருமொழி என்பனவற்றில் திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் இருவரும் இதனைப்பாடி, மங்களா சாசனம் செய்திருக்கின்றனர்.

இறைவனுக்கு உரிய தாண்டவங்கள் ஏழு. அவை முறையே காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம். சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்பன. இவற்றுள் நடராஜப்பெருமான் ஆனந்த தாண்டவம். இதனைப் பஞ்ச கிருத்தியப் பரமானந்த தாண்டவம் என்றும் கூறுவர்.

சிதம்பரத்தில் வேடன் பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளைதார் கோயில், சேக்கிழார் கோயில், கமலீசுவரன் கோயில், தேரடிப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில், வீரபத்திர சுவாமி கோயில், செல்லியம்மன் கோயில், நந்தனர் கோயில், கூத்தாடும் பிள்ளையார் கோயில், இளமை யாக்கினர் கோயில், அனந்தேசுவரர் கோயில், தில்லைக் காளி கோயில், நரமுகப் பிள்ளையார் கோயில், மத்யந்தனேசுவரர் கோயில் எனப் பல கோயில்கள் உள்ளன.

இங்கு ஞானப் பிரகாசர் குளம் (தெப்போற்சவம் நடைபெறுவது). ஓமகுளம் (நந்தனர் ஓமகுண்டத்தில் மூழ்கி எழுந்த இடம்) வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், திருப்பாற்கடல், சிவகங்கை முதலிய சிறந்த தீர்த்தங்கள் உள்ளன.

இங்குள்ள கோபுரங்களுள் கிழக்குக் கோபுரம் மதுரைச் சுந்தரபாண்டிய தேவன் (கி.பி. 1250) கட்டியது. கி பி. 1785 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் மனைவி விஜயாள் அம்மாளின் தாயார் சுப்பம் மாள் இக்கோபுரத்தைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டார்.

வடக்குக் கோபுரம் விஜயநகரப் பேரரசர் ஆகிய கிருஷ்ண தேவராயர் (கி.பி. 1509-1530), தம்முடைய ஒரிசா வெற்றி நினைவாகக் கட்டியது. 140 அடி உயரம் கொண்டது. தெற்குக் கோபுரம் கோப் பெருஞ் சிங்கதேவன் (கி.பி. 1243) என்ற பல்லவ வேந்தனால் கட்டப்பெற்றது. மேற்குக் கோபுரம் அவன் கட்டியதே என்பர். கிழக்கு மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய பேதங்களை அறிவிக்கும் சிற்பங்கள் அழகிய முறையில் அமைந்துள்ளன.

கிழக்குக் கோபுர வாயிலாக மணிவாசகரும், தெற்குக் கோபுர வாயிலாக ஞானசம்பந்தரும், மேற்குக் கோபுர வாயிலாக அப்பர் சுவாமிகளும், வடக்குக் கோபுர வாயிலாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இங்கு வந்து இறைவனை வழிபட்டனர் எனப் பெரியோர்கள் கூறுவர்.

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம் கட்டியவன் தொண்டை நாட்டு மணவிற் கூத்தனாகிய காலிங்கராயன் (கி.பி. 1118-1150) என்பவன். இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் (இராஜ சபை) தான், சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தை அரங்கேற்றிய இடம்.

பதஞ்சலி வியாக்கிரபாதர் திருமூலர் நால்வர் பெருமக்கள் முதலிய சான்றோர்கள் பலரும் வாழையடி வாழையாக வழிபட்டு வணங்கி வந்துள்ள புனிதத் தலம் இது. தலவிருட்சம் ஆல்; தில்லை என்றும் கூறுவர்.

இங்குக் கனகசபையைச் சுற்றியுள்ள பிராகாரம் விக்ரம சோழன் திருமாளிகை; திருமூலட்டானத்தைச் சேர வருகின்ற இரண்டாம் பிராகாரம் குலோத்துங்க சோழன் திருமாளிகை; அதற்கு அடுத்துள்ள மூன்றாம் பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை.

தில்லை என்னும் சிதம்பரத்தில் இருந்தே திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள், முதலாம் இராஜ ராஜ சோழன் (கி.பி. 985-1014) காலத்தில் கண்டெடுத்துத் தொகுத்தளித்

தார். ஒரு சிலர் ஆதித்த சோழன் காலத்தில் என்றும் கூறுவர். திருமுறை கண்ட விநாயகர் இரண்டாம் பிரா காரத்து, மேலை வாசலின் எதிரில் உச்சியில் இருக்கின்ருர். இவரை உச்சிப் பிள்ளையார் என இக்காலத்து மக்கள் வழங்குவர்.

சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் மறைஞான சம்பந்தரும், உமாபதி சிவாசாரியரும் இத்தலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். மறைஞான சம்பந்தர் சிவயோ கத்தில் அமர்ந்திருந்த இடமாக மேற்குக் கோபுரத்தில் தென்பக்கத்தில் ஒரு குகை இருக்கின்றது. இவருடைய சமாதிக் கோயில் 'சிங்காரத் தோப்பு' என வழங்கும் திருக் களாஞ் சேரியில் உள்ளது.

மறைஞான சம்பந்தரின் சீடர் உமாபதி சிவம். அவர் தில்லை மூவாயிரம் தீட்சிதர்களுள் ஒருவர். கோயிற் புராணம். சேக்கிழார் சுவாமிகள் புராணம் முதலியன பாடியவர். 'சித்தாந்த அஷ்டகம்' என்னும் எட்டு நூல்களை இயற்றிவரும் இவரே. இவர் வாழ்ந்து வந்த திருமாளிகை சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் திருவாவடுதுறை மட மாக இருக்கின்றது. உமாபதி சிவத்தின் சமாதிக் கோயில் அண்ணமலை நகர் எல்லையில் கொற்றவன்குடி என்னும் பகுதியில் உள்ளது.

சிதம்பரம் கோயில் முதன் முதலில் இரணிய வர்மன் என்னும் மன்னவனல் அமைக்கப்பட்டது என்பர். இக் கோயில் அண்டம் (Macrocosm) பிண்டம் (Microcosm) என்னும் இரண்டின் நுட்பங்களையும் உணர்த்தும் நிலையில் உளது என்பர் பெரியோர். அண்டத்தின் ஒரு பகுதி பரத கண்டம். அதில் உள்ள இலங்கைக்கும் இமயத்திற்கும் இடையில் உள்ளது தில்லை. இலங்கை இடைகலை, இமயம் பிங்கலை, தில்லை சுழுமுனை (நடுநாடி) நான்கு கோபுரங்கள் நான்கு வேதங்கள். ஆயிரக்கால் மண்டபம் சஹஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரை, சிவகங்கைத் தீர்த்தம் சஹஸ்ராரத்தை அடுத்த அமுதவாவி. நான்கு தம்பங்கள் நான்மறைத் தேவதைகள். அடுத்துள்ள 28 நெடுமரத் தம்பங்கள் 28 ஆகமங்கள். 96 பலகணிகள் 96 தத்துவங் களைக் குறிக்கின்றன. விமானத்தின் 9 கலசங்கள் நவசக்தி களை நினைப்பிக்கின்றன. விமானத்தின் 64 கழிகள் 64 கலைகளை யுணர்த்தும். கனகசபையின் பொன் ஓடுகள் 21600.

அவை மனிதர்களாகிய நாம் நாடோறும் விடும் சுவாசங்களின் தொகையை அறிவிக்கின்றன. அவற்றில் அடித்துள்ள ஆணிகள் 72000. அவை நாம் விடும் சுவாச ஆதாரங்களைப் புலப்படுத்தும். இங்குள்ள இராஜ சபை தேவ சபை நிருத்த சபை கனகசபை சித்சபை என்னும் ஐந்தும் முறையே தூலவுடல் சூக்குமவுடல் குணவுடல் கஞ்சுகவுடல் காரணவுடல் என்னும் ஐந்தையும் சுட்டும். இங்ஙனம் பல தத்துவ நுட்பங்கள் இக்கோயில் அமைப்பில் திகழ்கின்றன.

" தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்தரும் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே ".

—குமரகுருபரர்.

2. திருவேட்களம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - தக்கராகம் [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்தமுழவம் இயம்ப மலைமகள் காணநின்ருடிச்
சந்தமிலங்கு நகுதலை கங்கை தண்மதியம் அயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும் வேட்களநன் னகராரே 1

விண்ணியன் மாடம் விளங்கொளிவீதி
வெண்கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணிய சீர்வளர் காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணின் நல்லாளொரு பாகமமர்ந்து
பேணிய வேட்கள மேல்மொழிந்த
பண்ணியல்பாடல் வல்லார்கள் பழியொடு பாவமிலாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 1

சேட னுருறை யுஞ்செழு மாமலை
ஓடி யாங்கெடுத் தான்முடி பத்திற
வாட வூன்றி மலரடி வாங்கிய
வேட னுருறை வேட்களம் சேர்மினே. 10

திருச்சிற்றம்பலம்.

2. திருவேட்களம் : சிதம்பரம் இருப்புப் பாதை நிலையத் திற்குக் கிழக்கே அருகில் இருப்பது. அண்ணுமலைப் பல் கலைக் கழகம் அமைந்துள்ள இடமே திருவேட்களம் ஆகும். அருச்சுனனுக்குச் சிவபிரான் பாசுபதம் கொடுத்த தலம். சுவாமி பாசுபதேசுவரர். அம்பிகை நல்ல நாயகி. கோயி லில் அருச்சுனன் திருவுருவமும் பாசுபதமும் ஏந்திய சுவாமி யின் திருவுருவமும் உள்ளன. வைகாசி விசாக நாளில் இறைவன் வேடனாக வந்து அருச்சுனனுடன் போர் புரிந்து பாசுபதப் படைநல்கும் விழா நடைபெறுகின்றது. அப்பர் சம்பந்தர் பாடல் பதிகம் 2.

3. திருநெல்வாயில்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

பண் - இந்தளம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

புடையி னூர்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னூர்மணி நீர்நெல் வாயிலார்
நடையில் நால்விரல் கோவ ணந்நயந்
துடையி னூரெம துச்சி யாரே. 1

நெண்ப யங்குநெல் வாயி லீசனைச்
சண்பை ஞானசம் பந்தன் சொல்லிவை
பண்பயன் கொளப் பாட வல்லவர்
விண்ப யன்கொளும் வேட்கை யாளரே. 11

திருச்சிற்றம்பலம்

3 திருநெல்வாயில் : சிதம்பரம் இருப்புப் பாதை நிலயத்தில் இருந்து தென்கிழக்கே 1½ கல் தொலைவிலும் அண்ணமலை நகருக்குத் தெற்கே ஒருகல் தொலைவிலும் உள்ளது, சம்பந்தர் பாடல் 1. சுவாமி உச்சிநாதர். அம்மையார் கனகாம்பிகை.

4. திருக்கழிப்பாலை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பண்-இந்தளம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

புனலா டியபுன் சடையாய் அரணம்
அனலா கவிழித் தவனே அழகார்
கனலா டலினய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே. 1

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தனசொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்
கெழியார் இமையோ ரொடுகே டிலரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர்

பண் - காந்தாரம் [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே என்கின் றளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்ற னென்கின் றளால்

அனபவள மேகலையொ டப்பாலைக்
கப்பாலா னென்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 1

அடர்ப்பரிய இராவணனை யருவரைக்கீழ்
அடர்த்தவனே என்கின் றாளால்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளால்
மடற்பெரிய ஆலின்கீழ் அறநால்வர்க்
கன்றுரைத்தா னென்கின் றாளாற்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 10

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நங்கையைப் பாகம்வைத்தார் ஞானத்தை நவிலவைத்
தார்
அங்கையி லனலும்வைத்தார் ஆனையி னுரிவைவைத்தார்
தங்கையின் யாழும்வைத்தார் தாமரை மலரும்வைத்
தார்
கங்கையைச் சடையுள்வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்
பனரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம் [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நாட்பட் டிருந்தின்ப மெய்தலுற் றிங்கு நமன்றமரால்
கோட்பட் டொழிவதன் முந்துற வேகுளி ரார்தடத்துத்
தாட்பட்ட தாமரைப் பொய்கையந் தண்கழிப் பாலை
யண்ணல்
காட்பட் டொழிந்தமன் றேவல்ல மாயிவ் வகலிடத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிவள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையாம்
அண்ண லேயறி வானிவள் தம்மையே. 1

பொன்செய் மாமுடி வாரரக் கன்றலை
அஞ்சு நான்குமொன் றுமறுத் தானவன்
என்செ யான்கழிப் பாலையு ளெம்பிரான்
துஞ்சும் போதும் துணையென லாகுமே. 10

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம் [6-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விண்ணப்ப விச்சா தரர்கள் ஏத்த
விரிகதிரா னெரிசுடரான் விண்ணு மாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்துள் ளேயும்
பசுபதி பாசுபதன் தேச மூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
கழிப்பாலை மேய கபா லப்பனூர்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே. 6

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் – நட்டராகம் [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

செடியேன் தீவினையில் தடுமாறக் கண்டாலும்
அடியான் ஆவனு தொழிதல் தகவாமே
முடிமேல் மாமதியும் அரவும் உடன்துயிலும்
வடிவே தாமுடையார் மகிழும் கழிப்பாலையதே. 1

பழிசே ரில்புகழான் பரமன் பரமேட்டி
கழியார் செல்வமல்கும் கழிப்பாலை மேயானைத்
தொழுவான் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
வழுவா மாலைவல்லார் வானோருல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

4. திருக்கழிப்பாலை: இத்தலம் முன்னர்க் கொள்ளிடத்தின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்து வந்தது. கொள்ளிடத்தில் வெள்ளம் பெருகிப் பழுதுபட்டதனால் இப்போது திருநெல்வாயில் என்னும் சிவபுரியில் சிதம்பரம் இருப்புப் பாதை நிலயத்திற்குத் தென்கிழக்கில் சுமார் 3 கல் தொலைவில் படுகை முதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்னும் சிவபுண்ணியச் செல்வரால், புதிய கோயில் கட்டி அமைக்கப் பெற்றுள்ளது. வான்மீகி முனிவர் பூசித்த தலம். சுவாமி பால்வண்ணநாதர். அம்பிகை வேதநாயகி. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் மெலிவு கண்டு, செவிலித்தாய் அல்லது நற்றாய் கூறிய துறையாக அகப்பொருட் சுவையில் திருநாவுக்கரசர் பாடியுள்ள பாடல்கள் மிகவும் சிறப்புடையவை. அப்பர், சம்பந்தர், சுந்தரர், பாடல் பதிகங்கள் 8.

5. திருநல்லூர்ப் பெருமணம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - அந்தாளிக்குறிஞ்சி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே. 1

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவம் அவலம் இலரே. 11

திருச்சிற்றம்பலம்

5. **திருநல்லூர்ப் பெருமணம்:** இதனை ஆச்சாள் புரம் என மக்கள் வழங்குவர். ஆச்சாரியர்கள் புரம் என்பது இங்ஙனம் மருவியதாக அறிஞர்கள் கூறுவர். இது மாயூரத்தில் இருந்து சென்னைக்குச் செல்லும் இருப்புப் பாதையில் கொள்ளிடம் என்னும் நிலயத்தில் இருந்து கிழக்கே 3 கல் தொலைவில் விளங்குகின்றது. திருஞான சம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்ததும், அவர் தம் திருமணத்தில் தம் மனைவியாரோடும் அடியார் குழாங்களோடும் இறையருளால் தோன்றிய சோதியிற் சென்று கலந்து முத்தி எய்தியதும் இத்தலமேயாகும், அதனால் இதற்கு மணவை என்றும், முத்திபுரம் என்றும் பெயர்கள் உண்டு. திருஞான சம்பந்த சுவாமிகளின் திருமணத்தின் போது, அம்பிகை தோன்றி அங்குக் கூடியிருந்தார் அனைவருக்கும் திருவெண்ணீறு அளித்துச் சோதியுட் புகுவித்த தலம் ஆதலின் ஆயாள்புரம், ஆச்சாள்புரம் எனப் பெயர் பெற்றது. என்றும் கூறுவர். அம்பிகைக்கு இங்குத் திருவெண்ணீற்று உமை என்று பெயர். வசிட்டர் விசுவாமித்திரர் முதலிய முனிவர்களுக்கு இறைவன் சிவலோகக் காட்சியளித்தமையின், சுவாமி சிவலோகத் தியாகர் எனப்படுவார். திருஞான சம்பந்தரின் திருமணத்தில் தோன்றிய சிவசோதியைக் கண்டு அஞ்சி ஓடிய அபக்குவர்களையும் கூட, இறைவன் நந்தியம் பெருமானைல் மறித்து வெருட்டித் திரும்பிவரச் செய்து சிவசோதியுட் புகுவித்து முத்தி எய்துமாறு அருள் புரிந்தார். இதற்கு அடையாளமாக நந்திவெருட்டி, நந்திமடு என்ற பெயர்களுடைய இடமும் மடுவும் இங்கு உள்ளன. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்னும் பொது நமச்சிவாயத் திருப்பதிகம் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப் பெற்ற தலம் இதுவே, இங்குள்ள நடராசர் பண்பதைக்க ஆடும் நாயனூர் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளார். திருஞான சம்பந்தரின் மனைவியார் பெயர் 'சொக்கியார்' என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. தல விருட்சம் வில்வம். ஆச்சாமரம் என்றும் கூறுவர். கி. பி. 1749இல் இங்கு ஆங்கிலேயருக்கும் தஞ்சை மன்னன் படைகளுக்கும் ஒரு பெரும் கடும்போர் நிகழ்ந்தது. அதுபோது லாரென்ஸ் என்னும் ஆங்கிலேயர் இக்கோயிலைக் கைப்பற்றிக் கொள்ள முயன்றபோது, கோயிலின் புனிதமான இடங்களையும் பொருள்களையும் அழிக்காமல் இருக்கும்படி வேண்டிக் கொண்டு இங்கிருந்த அந்தணர்கள்

கோயிலைத் திறந்து விட்டனர் என்று தஞ்சை மாவட்டச் செய்தி நூல் தெரிவிக்கின்றது. அம்மன் கோயிலைக் கட்டியவர் 'சந்திர சேகரன் பஞ்சநதிவாணன்' எனக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்ட கோயில்களுள் ஒன்று. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய தலபுராணமும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய திருவெண்ணிற்றுமை பிள்ளைத் தமிழ் முதலியன இத்தலத்தின் இலக்கியங்களாகும். தீர்த்தம் பஞ்சாக்கர தீர்த்தம் முதலியன. சம்பந்தர்பதிகம் 1.

6. திருமயேந்திரப்பள்ளி

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - கொல்லி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடியிணை பணிமினே. 1

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பர மிதுவென நாவினால் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே. 11

திருச்சிற்றம்பலம்

6. திருமயேந்திரப்பள்ளி : இது கோயிலடிப் பாளையம் என வழங்கும் மஹேந்திரன் என்னும் ஓர் இந்திரன் வழிபட்ட காரணத்தால் மயேந்திரப் பள்ளி எனப் பெயர் பெற்றது. "சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும் இந்திரன் வழிபட இருந்த எம் இறையவன், மந்திரம் மறைவளர் மயேந்திரப் பள்ளியுள் அந்தமில் அழகனை அடிபணிந் துய்மினே" என்பது சம்பந்தர் தேவாரம். சந்திரனும் சூரியனும் பிரமனும் கூட இங்குப் பூசித்துப் பேறு பெற்றனர். சுவாமி திருமேனி அழகர். அம்மை வடிவாம்பிகை. இத்தலம் ஆச்சாபுரத்துக்கு வடகிழக்கே 4 கல் தொலைவில் உள்ளது.

7. தென்திருமுல்லைவாயில்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் – பியந்தைக்காந்தாரம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்ப ருலகங்கடந்த
உமைபங்கன் எங்கள் அரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கு மதுவில்
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடு
திருமுல்லை வாயி லிதுவே. 1

அணிகொண்ட கோதை யவள்நன்று மேத்த
அருள்செய்த எந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி
திருமுல்லை வாயில் இதன்மேல்
தணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான
மிகுபந்தன் ஒண்டமிழ்களின்
அணிகொண்ட பத்தும் இசைபாடுபத்தர்
அகல்வானம் ஆள்வர் மிகவே. 11

திருச்சிற்றம்பலம்

7. தென்திருமுல்லைவாயில் : இத்தலம் சீர்காழிக்குக் கிழக்கே 8 கல் தொலைவில் உள்ளது. தொண்டை நாட்டிலும் திருமுல்லைவாயில் என ஒரு தலம் இருத்தலால் இது தென் திரு முல்லைவாயில் எனப் பட்டது. இங்கு உமாதேவியார் தவம் இருந்து பூசித்துத் தட்சிணாமூர்த்தியினிடம் திருவைந்தெழுத்து உபதேசம் பெற்றனர். இதனை "அணிகொண்ட கோதையவள் என்றும் ஏத்த அருள் செய்த எந்தை" என வரும் சம்பந்தரின் திருக்கடைக்காப்புப் பாடல் கொண்டு உணரலாம். தேவேந்திரன் சுதர்மன் முதலானோர் பூசித்தனர். சுவாமி முல்லைவனநாதர். தேவி கோதையம்மை.

8. திருக்கலிக்காமூர்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர்

பண் - பழம்பஞ்சுரம் [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மடல்வரை யின்மது விம்முசோலை
வயல்சூழ்ந் தழகாருங்
கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ்
சொரியுங் கலிக்காமூர்
உடல்வரை யின்னுயிர் வாழ்க்கையாய
வொருவன் கழலேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும்
இறைவன் அருளாமே. 1

ஆழியுள் நஞ்சமு தாரவுண்டன்
றமரர்க் கமுதுண்ண
ஊழிதொறும்முள ராஅளித்தான்
உலகத் துயர்கின்ற
காழியுள் ஞானசம் பந்தன்சொன்ன
தமிழாற் கலிக்காமூர்
வாழி யெம்மானை வணங்கியேத்த
மருவா பிணிதானே. 11

திருச்சிற்றம்பலம்

8. திருக்கலிக்காமூர் : இஃது அன்னப்பன் பேட்டை என இந்நாளில் வழங்குகின்றது. மாயூரம் நிலையத்தில் இருந்து வட கிழக்காய்த் திருவெண்காடு சென்று அங்கிருந்து வடகிழக்காய் மூன்று கல் தொலைவில் உள்ளது. சுவாமி சுந்தரேசர். தேவி அழகம்மை. சம்பந்தர் பதிகம் ஒன்று மட்டும் பெற்றது.

9. திருச்சாய்க்காடு

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

பண் – இந்தளம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நித்தலுந் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயா ஊயின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே. 1

ஏனையோர் புகழ்ந்தேத் தியஎந்தை சாய்க்காட்டை
ஞானசம் பந்தன்கா ழியர்கோன் நவில்பத்தும்
ஊனமின் றியுரை செயவல் லவர்தாம்போய்
வானநா டினிதாள் வர்இம்மா நிலத்தோரே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் – சீகாமரம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே.

நொம்பைந்து புடைத்தொல்கு
நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி ஏத்துவார்க் கிடர்கெடுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருநேரிசை [4- ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தோடுலா மலர்கடுவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநா ளணுகிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செலலுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடு மேவினாரே.

குவப்பெருந் தடக்கைவேடன் கொடுஞ்சிலை
யிறைச்சிப்பாரந்
துவர்ப்பெருஞ் செருப்பானீக்கித்
தூயவாய்க் கலசமாட்ட
உவப்பெருங் குருதிசோர வொருகணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே.

நக்குலா மலர்பன்னூறு கொண்டுநன் ஞானத்தோடு
மிக்கபூ சனைகள்செய்வான் மென்மல ரொன்றுகாணா
தொக்குமென் மலர்க்கணென்றங் கொருகணை
யிடந்துமப்பச்
சக்கரங் கொடுப்பர்போலுஞ் சாய்க்காடு மேவினாரே.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் [6 - ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

உறைப்புடைய விராவணன்பொன் மலையைக் கையா
லூக்கஞ்செய் தெடுத்தலுமே யுமையா ளஞ்ச
நிறைப் பெருந்தோ ளிருபதும்பொன் முடிகள் பத்து
நிலஞ்சேர விரல்வைத்த நிமலர் போலும்
பிறைப்பிளவு சடைக்கணிந்த பெம்மான் போலும்
பெண்ணா ணுருவாகி நின்றார் போலுஞ்
சிறப்புடைய வடியார்கட் கினியார் போலுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம்

9. திருச்சாய்க்காடு: இது சாயாவனம், பூம்புகார் எனவும் வழங்கும். இது சீர்காழிக்குத் தென்கிழக்கே 9 கல் தொலைவில் உள்ளது. மாயூரத்தில் இருந்து திருவிளநகர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டும் இத்தலத்தை அடையலாம். முன்னொரு காலத்தில் இந்திரனின் தாயார் இங்கு வந்து இத்தலத்தைப் பூசித்து வந்தாள். தாயார் மண்ணுலகம் சென்று வழிபட்டு வரும் வருத்தத்தைத் தவிர்க்க இந்திரன் இத்தலத்தினை விண்ணுலகத்திற்கு அகழ்ந்தெடுத்துச் செல்ல முயன்றான். பாதாளம் வரையில் அகழ்ந்து பார்த்தும் அவனால் இதனைப் பெயர்த்தெடுக்க இயலவில்லை. அதனால் அவன் இக்கோயிலைப் புதுப்பித்து, தேவபூசை நிகழ்ந்து வந்ததனை மனிதர்களும் பூசித்து உய்யுமாறு செய்து சிறப்புறவித்தான். இந்திரன் அகழ்ந்த பொழுது ஆதிசேடனின் பணமகுட மாணிக்கச் சாயை பரவிய காரணத்தினால், இது சாயாவனம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். சுவாமி சாயாவனேசுவரர். தேவி குயிலினும் நன்மொழியம்மை. அப்பர் சம்பந்தர் பாடல் பதிகங்கள் 4. சிவபிரான் இயற்பகை நாயனாரின் மனைவியை உடன் கொண்டு சென்று, பின்னர்க் காட்சி கொடுத்தருளிய தலம் இதுவே.

10. காவிரிப்பூம்பட்டினத்துத் திருப்பல்லவனீச்சரம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - தக்கேசி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கள்மூன்றும் ஆரழலில் அழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும் வித்தகர்மேயவிடம்
கடையார்மாடம் நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே.

பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தெம்
அத்தன்தன்னை அணிகொள்காழி
ஞானசம்பந்தன்சொல்
சித்தஞ்சேரச் செப்பும்மாந்தர் தீவினைநோயிலராய்
ஒத்தமைந்த உம்பர்வானில் உயர்வினொடோங்குவரே.

10. **திருப்பல்லவனீச்சரம்** : இது காவிரிப்பூம்பட்டினத் துறை பல்லவனீச்சரம் எனப் பெறும். பல்லவ மன்னன் ஒருவன் பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பெயர் எய்திற்று. இயற்பகை நாயனர், பட்டினத்தடிகள் ஆகிய பெருமக்களின் அவதாரத் தலம். சம்பந்தர் பதிகங்கள் 2. சுவாமி பல்லவனேசுவரர். தேவி சௌந்தர நாயகி. தீர்த்தம் காவிரி சங்கம தீர்த்தம் [கடலொடு காவிரி கலக்கும் ,முன்றில்] இது சாய்க்காடு என்னும் தலத்திற்குக் கிழக்கே கால் மைல் தொலைவில் உள்ளது.

11. திருவெண்காடு

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர்

பண் - சீகாமரம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங்
கொடியானே.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

தண்பொழில்சூழ் சண்பையர்கோன்
தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி
விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய்
வான்பொழியப் புகுவாரே

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை [5 ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பண்காட் டிப்படி யாயதன் பக்தர்க்குக்
கண்காட் டிக்கண் ணி னின்ற மணியொக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்றிரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே.

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
யிராவ ணம்முடை யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்றிரு வெண்கா டடைமினே.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் [6-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

புள்ளானு நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றான் றன்னை
உள்ளானை யொன்றலா வுருவி னானை
யுலகுக் கொருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கொன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொடுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

திருச்சிற்றம்பலம்

சுந்தர மூர்த்தி நாயனார்

பண் - இந்தளம் [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

படங்கொள் நாகம் சென்னி சேர்த்திப்
பாய்புலித்தோல் அரையில் வீக்கி
அடங்கலார் ஊர் எரியச்சீறி
அன்று மூவர்க் கருள் புரிந்தீர்

மடங்கலானைச் செற்றுகந்தீர்
மனைகள்தோறும் தலைகைஏந்தி
விடங்கராகித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. 1

விரித்தவேதம் ஓதவல்லார்
வேலைசூழ்வெண் காடுமேய
விருத்தனைய வேதன்றன்னை
விரிபொழில்திரு நாவலூரன்
அருத்தியால்ஆ ரூரன்தொண்டன்
அடியன்கேட்ட மாலை பத்தும்
தெரித்தவண்ணம் மொழியவல்லார்
செம்மையாளர் வானுளாரே. 10

திருச்சிற்றம்பலம்

11. திருவெண்காடு: இது சுவேதவனம் எனவும் சுவேதாரண்யம் எனவும் வடமொழியில் வழங்கப் பெறும். சென்னை மாயூரம் இருப்புப் பாதையில் சீகாழி இருப்புப் பாதை நிலையத்தில் இருந்து 9 கல் தொலைவில் உள்ளது. மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூவகைப் பெருமைகளையும் உடையது. சுவேதாரண்யேசுவார், நடராஜர், அகோர சிவர் என்னும் மூன்று மூர்த்திகள் தீர்த்தங்கள், சோம குளம் சூர்ய குளம் அக்னி குளம் என்னும் மூன்று வடவால் கொன்றைவில்வம் என்னும் மூன்று தலவிருட்சங்கள். இங்கு மிகவும் சிறப்புடன் திகழ்ந்து வருதலைக் காணலாம். திருப் பெண்ணகடம் என்னும் நடுநாட்டுத் தலத்தில் வதிந்துவந்த அச்சுத களப்பாளர் என்னும் பெருந்தகையார் "பேயடையா பிரிவெய்தும்" எனத் தொடங்கும் திருஞானசம்பந்தர் தேவாரப் படி இங்குள்ள முக்குளநீரில் மூழ்கி இறைவனை வழிபட்டு சிவஞானபோதம் என்னும் செந்தமிழ்ஞான நூலையருளிய சைவ சித்தாந்த முதற்பெருஞ் சான்றோர் ஆகிய ஆசிரியர் மெய்கண்ட தேவரை மகவாகப் பெற்றெடுக்கும் பேறுபெற்ருர். பட்டினத்தடிகள் சிவபூசை பெற்றதும், இந்திரன் பாவம் நீங்கியதும், ஐராவதம் என்னும் வெள்ளை யானை வழிப்பட்டுச் சாபம் விலகியதும் சுவேதகேது சுவேதன். முதலியவர்கள் பேறு பெற்றதும் இத்தலமேயாகும். 'விண்ணவர்கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே' நயந்தவர்க்கு அருள் பல நல்கி இந்திரன் கயந்திரம்

வழிபட நின்ற' வெள்ளாளை வேண்டும் வரங்கொடுப்பார் வெண்காடு 'மேவிய விகிர்த னூரே' 'அயிராவதம் பணிய மிக்கதனுக்கு அருள்சுரக்கும் வெண்காடு' எனவரும் தேவாரப் பாடற் பகுதிகள், இங்கு நினைவு கூர்ந்து மகிழத் தக்கன. மாசி மாதத்தில் இங்கு நடக்கும் திருவிழா இந்திரனே வந்து நடத்துவதாக ஐதிகம். அதனுல் இந்திர மகோற்சவம் எனப் பெயர் பெறும். ஐராவதத்தால் அமைக்கப்பட்ட தீர்த்தம் 'யானை மடு' என வழங்கி வருகின்றது.

இத் தலத்தில் எழுந்தருளியுள்ள அகோரமூர்த்தி மருத்துவாசுரன் என்பவனின் வலி தொலைக்கத் தோன்றியவர். இவர் திருவுருவத்தில் 14 நாகங்கள் ஆபரணமாக விளங்குகின்றன. இவருடைய வலதுகால் கட்டைவிரல், இரண்டாவது விரல் ஊன்றி மற்ற பாதம் தூக்கியிருக்கின்றது. அப்பர் சுவாமிகள் இத்தலத்தைப் பற்றி பாடிய 'தூண்டுசுடர் மேனி' எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில் சொல்லப்பட்டவை யனைத்தும் அகோர மூர்த்தியின் திருவுருவத்திற் காணலாம். எண்தோள் முக்கண் ஈசராக மூவிலைச் சூலம் ஏந்திய கையுடன் திகழும் இவர்தம் திருவடியில், மருத்துவாசுரன் மல்லாந்த நிலையில் சரணுகதியடைந்து கிடக்கின்ருன். அகோர வீரபத்திரர் என்பவர் இவரின் வேறு.

இங்குள்ள பெரிய வாரணப் பிள்ளையார், சட்டைநாதர், மெய்கண்டார், பொல்லாப்பிள்ளையார், பிள்ளை இடுக்கி அம்மன், பத்திரகாளி, துர்க்கை, பிட்சாடான மூர்த்தி முதலிய பல திருவுருவங்களும் கண்டு களிக்கத் தக்கவை.

திருஞான சம்பந்தர் இங்கு வந்த பொழுது ஊரெலாம் சிவலோகம் மணலெலலாம் சிவலிங்கம் எனக் கண்டு மிதிக்க அஞ்சிய பொழுது அம்பிகையைக் கூப்பிட, பெரியநாயகியம்மை சென்று அவரை இடுப்பில் எடுத்து வந்தார். அதனுல் 'பிள்ளை இருக்கி அம்மன்' என்ற பெயர் ஏற்பட்டது. பிள்ளையை இடுப்பில் வைத்துள்ள அம்பாள் திருவுருவம் பிரம வித்தியா நாயகி கோயில் மேற்கு உட்பிராகாரத்தில் இருக்கின்றது.

பட்டினத்தார் துறவுநெறி மேற்கொண்ட பொழுது, அவர்தம் கணக்கராக விளங்கிய சேந்தனர் என்பவரை, அடிகளாரின் நிதி முழுவதையும் தனக்குக் காட்டாமல் வறியோர் கவர்ந்து கொள்ளும்படி விடுத்தமைக்காக, அரசன் சிறையிலிட்டு வருத்த, அஃது அறிந்த பட்டினத்தார் 'செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தன் இட்ட கைத்தளை நீக்கி என்முன் காட்டு வெண்காட்டுளானே' எனப்பாடித் துதிக்க, விநாயகப் பெருமான் சென்று சேந்தனரின் விலங்கைத் தறித்துச் சிறை விடுத்தார். இங்ஙனம் 'விலங்கு தறித்த விநாயகர்' கோயில் திருவெண்காட்டீசர் கோயிலுக்குத் தென்மேற்கே சிறிது தொலைவில் இருக்கிறது. அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் கபிலதேவர் பரணதேவர் முதலிய சான்றோர்கள் இத்தலத்தைத் தம் பாடல்களாற் சிறப்பித்துள்ளனர். சைவ எல்லப்ப நாவலர் திருவெண்காட்டுப் புராணம் பாடியுள்ளார். அப்பர் சம்பந்தர் சுந்தரர் பாடல், பதிகங்கள் 6.

12. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

பண்-நட்டபாடை [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே. 1

பொன்னியல் தாமரை நீலம்நெய்தல்
போதுகளாற்பொலி வெய்து பொய்கைக்
கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடற் காழியர்கோன்
துன்னிய இன்னிசை யாற்றுதைந்து
சொல்லிய ஞானசம் பந்தன்நல்ல
தன்னிசை யாற்சொன்ன மாலைபத்துந்
தாங்கவல் லார்புகழ் தாங்குவரே.

திருச்சிற்றம்பலம்

12. **கீழைத் திருக்காட்டுப் பள்ளி :** இது திருவெண் காட்டினின்று மேற்கே ஒரு மைல் தொலைவில் உள்ளது. காவிரிக்குத் தென்கரையில் தஞ்சைக்கு மேற்கே ஒரு திருக்காட்டுப் பள்ளி இருப்பதனால், இது கீழைத் திருக் காட்டுப்பள்ளிஎனப்பெயர் பெற்றது. இந்திரன் விருத்திரா சுரனைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலம். "தோலுடை யான் வண்ணப் போர்வையினான் சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கும் நூலுடையான் இமையோர் பெருமான் நுண்ணறிவால் வழிபாடு செய்யும் காலுடையான் கரிதாய பண்டன் காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி" எனச் சம்பந்தர் பதிகத்துள் வருவதைக் காணலாம். சுவாமி ஆரணிய சுந் தரர். தேவி அகிலாண்ட நாயகி.

13. திருக்குருகாவூர் வெள்ளடை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - அந்தாளிக்குறிஞ்சி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் ணீறணி மார்பில் தோல்புனைந்
தெண்ணரும் பல்கணம் ஏத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே.

காவியங் கண்மட வாளொடுங் காட்டிடைத்
தீயக லேந்திநின் றாடுதிர் தேன்மலர்
மேவிய தண்பொழில் வெள்ளடை மேவிய
ஆவினில் ஐந்துகொண் டாட்டுகந் தீரே.

திருச்சிற்றம்பலம்

13. **திருக்குருகாவூர் :** இத்தலம் சீர்காழிக்குத் தெற்கே தென் திருமுல்லைவாயிலுக்குப் போகும் பாதையில் மூன்று வது கல்லில் தெற்கே திரும்பிச் செல்லின், அரைகல் தொலைவில் உள்ளது. சுந்தரர்க்காக இறைவன் தண்ணீர்ப் பந்தர் அமைத்துப் பொதிசோறு அளித்த தலம். 'பாடுவார் பசிதீர்ப்பாய்' என்றும், 'இத்தனையா மாற்றை அறிந்தி லேன்' என்றும் சுந்தரர் பாடியிருத்தல் காணலாம். சுவாமி

வேட வடிவத்துடன்வந்து வழிகாட்டினமையினால் 'வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே' எனச் சுந்தரர் பாடினார். இறைவன் சுந்தரர்க்குப் பொதிசோற்று அமுது ஊட்டிய இடம். வரிசைப்பற்று முதலிய பெயர்களுடன் வழங்கி வருகின்றது. இவ்விழா சித்திரா பௌர்ணிமையில் நடைபெறுகின்றது. இக்கோயிலுக்கு வெளியே யுள்ள பாற்கிணறு என்ற ஒரு தீர்த்தம் தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் பால்போல வெள்ளை நிறம் அடைவது அற்புதமானது. அதனாலேயே சுவாமிக்கு வெள்ளடை நாதர் எனப்பேயர் அமைந்தது போலும். அம்பிகை காவியங்கண்ணி. வெள்ளடை என்பது கோவிலுக்குப் பெயர் ஆகலாம். "விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய பெண்ணமர் மேனி பிஞ்ஞகனரே" என்பது சம்பந்தர் தேவாரம். "காவியங்கண் மடவாள்" என்னும் தொடரும் சம்பந்தர் தேவாரத்தில் பயின்றுளது.

14. திருப்பிரமபுரம் (சீகாழி)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் – நட்டபாடை [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரதேமவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன் உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

திருச்சிற்றம்பலம்

பண் – சீகாமரம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன் தன்மைகளே.

திருச்சிற்றம்பலம்

திருவேணுபுரம்

பண் – நட்டபாடை [1-ம் திருமுறை]

வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளம்நெடு மாடம்
விண்டாங்குவ போலும் மிகு வேணுபுரம் அதுவே.

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை இல்லா இவை பத்தும் இசை வல்லார்
கேதத்தினை இல்லார்சிவ கெதியைப் பெறுவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் பண்–நட்டராகம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நம்பொருள் நம்மக்களென்று நச்சி இச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

தக்கனார் தலையரிந்த சங்கரன் தனதரை
அக்கினோ டரவசைத்த அந்திவண்ணர் காழியை
ஒக்கஞா னசம்பந்தன் உரைத்தபாடல் வல்லவர்
மிக்கஇன்ப மெய்திவீற் றிருந்துவாழ்தல் மெய்ம்மையே

திருச்சிற்றம்பலம்

3

திருத்தாளச்சதி. பண் – வியாழக்குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்
களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார் நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு
பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணு வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தால் எண்டிக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
கார்டார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே.

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கன
மொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே இமைத்திசைத்த மைத்த
கொண்
டேழேயேழே நாலேமுன் றியலிசை இசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதல் மடவரலே.

திருச்சிற்றம்பலம்

பண் – மேகராகக் குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்தஅன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள் கோயில்

வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. 1.

கற்றவர்கள் பணித்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்றன் கழல்மேல் நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றான் நயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்திரண்டுந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலகம் அதுஆண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே. 11

திருச்சிற்றம்பலம்

பண் – கொல்லி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.

திருச்சிற்றம்பலம்

திருவிருக்குக்குறள்

பண் - குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அரனை உள்குவீர், பிரமனூருளெம்
பரனை யேமனம், பரவி உய்ம்மினே
தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே.

திருச்சிற்றம்பலம்

திருவெழுகூற்றிருக்கை

பண் - வியாழக் குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை

இருவரோ டொருவனாகி நின்றனை
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை

இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்

திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை

ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலி யமைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூவுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

திருவியமகம்

பண் – பழம்பஞ்சுரம் [3–ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே;
கனல்வழி காய்வது காமனையே

அற்றம் மறைப்பது உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே

பருமதில் மதுரைமன் அவையெதிரே
பதிகம தொழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே
வசையொடு மலர்கெட வருகரனே.

கருதலில் இசைமுரல் தருமருளே
கழுமலம் அமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே
வல்லவர் தம்மிடர் திடமொழியே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் - நக்கேசி [7ந் – திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மற்றெரு துணையினி மறுமைக்கும் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்
துணையென்று நான்றெழப் பட்ட ஒண் சுடரை

முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறை முறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

செழுமலர்க் கொன்றையும் கூவிள மலரும்
விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட்
டழுமவர்க் கன்னிணை அடியவர்க் கல்லால்
அறிவரி தவன்திரு அடியிணை இரண்டும்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டூரன்
சடையன்தன் காதலன் பாடிய பத்தும்
தொழுமலர் எடுத்தகை அடியவர் தம்மைத்
துன்பமும் இடும்பையும் சூழகி லாவே. 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருவிருத்தம் [4-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின என்பர் நளிர் மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித் தாடுங் கழுமலவர்க்
காளன்றி மற்றுமுண் டோ வந்தணுகி யகலிடமே.

படையார் மழுவொன்று பற்றிய கையன் பதிவினவில்
சடையார் கொடிநெடு மாடங்க ளோங்குஸ் கழுமலமாம்
மடைவாய்க் குருகினம் பாளை விரிதொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா திருக்கும் பெரும் பதியே.

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந் தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம

மாதியன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனுஞ்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவனு னென்னுமென் தையலே.

இட்ட மாயின செய்வாளென் பெண்கொடி
கட்டம் பேசிய காரரக் கன்றனைத்
துட்ட டக்கிய தோணி புரத்துறை
அட்ட மூர்த்திக்கு அன்பது வாகியே.

திருச்சிற்றம்பலம்

14. சீர்காழி: திருஞான சம்பந்தர் அவதரித்த தலம். பிரமன் தனது படைப்புத் தொழில் இடையூறு இன்றி முடிவு பெற வழிபட்டதால் பிரமபுரம்; இறைவன் மூங்கில் வடிவமாக தோன்றிச் சூரபன்மனுக்கு அருள் செய்தமையால் வேணுபுரம்; சூரனுக்குப் பயந்த தேவர்கள் புகலிடமாகக் கொண்டு பூசித்தமையினல் புகலி; சுக்கிரன் இயமன் வியாழன் என்போர் குருத்துவம் பெறப் பூசித்த தனல் வெங்குரு; பிரளய வெள்ளத்திலும் அழியாதுதோணி போல மிதந்து, சிவபிரானும் அம்பிகையும் தங்கியிருக்கப் பெற்றதனல் தோணிபுரம்; தரையைப் பிளந்து சென்று இரணியாக்கனைக் கொன்ற வராக மூர்த்தி வணங்கிய தனல் பூந்தராய்; தலைக்கூருகிய இராகு இறைஞ்சிய தனல் சிரபுரம்; புரு வடிவோடு தன்னைச் சோதிக்க வந்த அக்கினி தேவனல் சிபிச் சக்கரவர்த்தி நற்கதியடைந்தமையால் புறவம்; சண்பைப் புல்லால் மாய்ந்த தங்குலத்தவரால் வந்த பழி தன்னைத் தொடராதிருக்கும்படி கண்ண பிரான் பூசித்ததனல் சண்பை; இறைவனை எதிர்த்து நடவாதம் புரிந்த காளி அக்குற்றம் நீங்கப் பணிந்ததனல் ஸ்ரீ காளிபுரம் (சீகாழி); மச்சகந்தி என்னும் பரதவர் குலப்

பெண்ணைப் புணர்ந்த கொச்சையாம் பழிச்சொல் நீங்கப் பராசரர் பரவியதனால் கொச்சைவயம்; எங்கும் கழியாத கொடிய மும்மலத் தொகுதியைக் கழுவித் தொலைக்க உரோமச முனிவர் உள்ளுருகித் தொழுததனால் கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்கள் இத்வரத்திற்கு உண்டு. இப்பெயர்களையெல்லாம் திருஞானசம்பந்தர் தமது பதிகங்கள் பலவற்றில் நிறைபிறழாமற் குறிப்பிட்டுள்ளார். பிரமபுரீசர் என்ற லிங்கம் ஆகிய திருமேனியும், தோணியப்பர் என்னும் குரு ஆகிய திருமேனியும், சட்டைநாதர் என்ற சங்கமம் ஆகிய திருமேனியும் ஆகிய மூன்றனுள்ளும் விளங்கிச் சிவபிரான் இங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இரணியனைச் சங்கரித்து எழுந்த நரசிங்கத்தைத் தடிந்து, அதன் தோலைச் சட்டையாக அணிந்த சட்டைநாதர் வரம் அருளும் வள்ளலாய் ஆபதுத்தாரணர் என்னும் பெயருடன் இங்கு வீற்றிருக்கின்றார். அவர் கையில் இருப்பது வாமனரைத் தடிந்து, அவர்தம் முதுகெலும்பைத் தண்டாக ஆக்கிய படை: வெள்ளிக்கிழமை தோறும் நள்ளிரவில் இவருக்கு நியமமாகச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. பைரவர் எட்டுகலைகளாய்த் தோன்றி இங்கு விளங்குகின்றார். இவ் அஷ்ட பைரவர்களும் தெற்குப் பிராகாரத்திலுள்ள வலம்புரி மண்டபத்தில் யோக நிலையில் காட்சி தருகின்றனர். இத்தலத்தில் பிரமதீர்த்தம் காளிதீர்த்தம் பராசர தீர்த்தம் முதலிய 22 தீர்த்தங்கள் உள்ளன.

திருநாவுக்கரசர் இங்கு வந்து சம்பந்தரைக் கண்டு மகிழ்ந்து நட்புப் பூண்டார். சுந்தரர் சம்பந்தர் தோன்றியருளிய பதி என்று கருதி இத்தலத்தை மிதிக்க அஞ்சி நகர்ப் புறத்தே இருந்து வழிபட்டு, இறைவன் காட்சி கொடுக்கப் பெற்று, புறநகரிலேயே "கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே" என்று பதிகம் பாடிப் போற்றினர். மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டை விட்டுத் தில்லைக்கு எழுந்தருளும் போது, இங்கு வந்து 'உம்பர்

கட்கு அரசே' என்று தொடங்கும் பிடித்தபத்து அருளிச் செய்தார்கள். பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக் கோவை' பாடியுள்ளார். அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவரான கணநாத நாயனர் இங்குத் தோன்றி யருளினர், அந்தணர் குலத்தில் அவதரித்த அவர், அடியார்களைப் பலவகைத் திருப்பணிகளிலும் பயிற்சி கொடுத்து பழக்கியருளிய பெருந்தகையார் ஆவர். மச் சுச் செட்டியார் காழிக் கங்கை மெய்கண்டார், சிற்றம்பல நாடிகள், கண்ணுடைய வள்ளலார், திருத்தோணியப்பர், மறைஞான சம்பந்சர், சண்பை ஞானப் பிரகாசர், தருமைச் சிவஞான தேசிகர், மாசிலாமணி தேசிகர், சிதம்பரநாத முனிவர், அருணசலக் கவிராயர் முதலிய பல சான்ருேர் கள் இங்கு அவதரித்துள்ளனர்.

இங்கு வீரராஜேந்திரன் (கி. பி. 1055–1070) இரண் டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133) இரண்டாம் இராஜ ராஜன் [கி. பி. 1144) இரண்டாம் இராஜாதிராஜன் (கி. பி. 1165] மூன்ரும் குலோத்துங்கன் [கி. பி. 1178] மூன்ரும் இராஜராஜன் [கி. பி. 1216) மூன்ரும் கோப்பெருஞ் சிங்கன் (கி. பி. 1243] வீர விருப்பண்ண உடையார் (கி. பீ- 1315) கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1509) வேங்கட தேவராயர் (கி. பி. 1613) ஆகியோரின் கல்வெட்டுக்கள் 47 உள்ளன. அவைகளில் பலவகை அறக்கட்டளைகளுக் காக நிலதானம் முதலியன வழங்கிய செய்திகள் கூறப்படுகின்றன.

இக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் ஆட்சியிற் பரிபாலிக்கப் பெற்று வருகின் றது. நாள்தோறும் காமிக காரண, வாதுள, மிரு கேந்திர ஆகமவிதிப்படி ஆறுகால பூசைகள் நடை பெறுகின்றன. சித்திரை மாதப் பிரமோற்சவத்தில் இரண்டாம் திருவிழாவாக நிகழும் திருமுலைப்பால் உற் சவம் (ஞானசம்பந்தருக்கு அம்பிகை ஞானப்பால் கொடுத்

தருளிய விழா) மிகவும் சிறப்பானது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சீர்காழிக் கோவை என்னும் சிறந்த நூலைப் பாடியுள்ளார்கள். சுவாமி பிரமபுரீசர், தோணியப்பர். அம்பிகை: திருநிலை நாயகி, பெரிய நாயகி.

15. திருகோலக்கா

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - தக்கராகம் [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ. 1

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

15. **திருக்கோலக்கா :** இது சீர்காழிக்கு மேற்கே ஒரு நாழிகை தொலைவில் உள்ளது. திருஞான சம்பந்தர் ஞானப்பால் உண்டபின், அடுத்த நாளிலேயே தமது முதல் யாத்திரை செய்த தலம். "மடையில் வாளை" என்னும் பதிகத்தினைச் சம்பந்தர் தமது கைகள் வருந்தும் வண்ணம் தாளம் இட்டுப் பாடுதல் கண்டு சிவபிரான் அவருக்கு ஐந்தெழுத்து எழுதிய பொற்றாளம் கொடுத்த தலம். அம்மையார் அதற்கு ஓசை கொடுத்த காரணத்

தால் ஓசை கொடுத்த நாயகி எனப்பெறுவர். சுவாமி தாளம் கொடுத்த காரணத்தால் திருத்தாளம் உடையார் எனப் பெறுவர். சத்தபுரீசர் என்றும் கூறுவர். சம்பந்தருக்கு இங்கு இறைவன் பொற்ருளம் கொடுத்த செய்தியினைச் சுந்தரர் தமது திருக்கோலக்காத் திருப்பதிகத்தின் 8–ம் பாட்டிற் குறிப்பிட்டுப் போற்றியருள்கின்ருர்.

16. திருப்புள்ளிருக்கு வேளூர்

(வைத்தீசுவரன் கோயில்)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர்

பண் – சீகாமரம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானுர் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானுர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளி ருக்கு முணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே. 1

அரக்க ஞர் தலை பத்து மழிதர
நெருக்கி மாமலர்ப் பாத நிறுவிய
பொருப்ப ஞருறை புள்ளிருக்கு வேளூர்
விருப்பி ஞற்றெழு வார்வினை வீடுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் [6-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்ருதே ஆற்றநாள் போக்கி னேனே. 8

திருச்சிற்றம்பலம்

16 **புள்ளிருக்கு வேளூர் :** இது வைத்தீசுவரன் கோயில் என வழங்கும். புள் (சடாயு), இருக்கு (இருக்குவேதம்) வேள் (முருகன்), ஊர் (சூரியன்) என்னும் நால்வரும் பூசித்துப் பேறு பெற்றதனல், இதற்குப் புள்ளிருக்கு வேளூர் எனப் பெயர் அமைந்தது. "மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" ஆக இங்குச்

சிவபிரான் எழுந்தருளி விளங்குதலால் வைத்தீசுவரன் (வைத்தியநாதர்) கோயில் என்று மக்கள் இதனை வழங்கி வருகின்றனர். சுவாமி வைத்தியநாதர். அம்பிகை தையல் நாயகி. தீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம். முருகன் செல்வ முத்துக் குமாரசாமி என வழங்கப் பெறுவர். தலவிருட்சம் வேம்பு. இது அங்காரக (செவ்வாய்) க்ஷேத்திரம் இத் தலத்தை வழிபடுவோர்க்குக் கோள்களினால் விளையும் தீங்குகள் ஒன்றும் நேரா. அதனால் இத்தலத்தில் நவக் கிரகங்களும் ஒரே வரிசையாக அமைக்கப் பெற்றுள்ளன. நேத்திரப்பிடி சந்தனம், சடாயு குண்டம், திருச்சாந் துருண்டை என்பன இங்கு மிகவும் புகழ் பெற்றவை.

விக்கிரமசோழன் (கி. பி. 1117) வீரராசேந்திரபாண்டியன், அச்சுதப்ப நாயக்கர் துளஸா மகா ராஜா (சகம் 1689) முதலியவர்களின் கல்வெட்டுக்கள் 8 இங்குக் காணப் படுகின்றன. இங்குப் பழைய பல்லவச் சிற்பங்களும், பாளங்கள் நிறைந்த தூண்களும், அம்மன் கோயில் தட்டஞ் சுற்றி மண்டபத்தில் பிரதாப சிம்ம மகாராஜா, பத்தாவது மகாசந்நிதானம் ஆக விளங்கிய ஸ்ரீ சிவஞான தேசிகர் ஆகியோர் திருவுருவச் சிற்பங்கள் உள்ளன. இது தருமபுர ஆதீனக் கோயில்களுள் ஒன்றாய்ச் சிறந்து விளங்குவது.

17. திருக்கண்ணார் கோயில்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தண்ணார் திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே.

காமருகண்ணார் கோயிலுள்ளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியல்மாடப் புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுள்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற் பழிபோமே. 1

திருச்சிற்றம்பலம்

17. **திருக்கண்ணார் கோயில் :** இது குறுமாணக்குடி என்று வழங்கும். இது வைத்தீசுவரன் கோயில் நிலையத்தில் இருந்து மாயூரம் போகிற பாதையில் 'மூன்றாவது மைலில் உள்ள கதிராமங்கலததிற்கு அருகே யுள்ளது. ஆனைதாண்டவபுரம் வழியாகவும் இங்குச் செல்லலாம். கௌதம முனிவரால் சபிக்கப் பெற்ற இந்திரன் பூசித்துத் தன் உடலிற் பொருந்திய குறிகள் கண்களாக மாறப்பெற்ற தனால் கண்ணார்கோயில் எனப் பெற்றது. முன் ஒரு காலத்து இந்திரன் பெற்ற முனி சாபம், பின் ஒரு நாள் அவ்விண்ணவர் ஏத்தப் பெயர் வெய்தித் தன் அருளாற் கண் ஆயிரம் ஈந்தோன் சார்வு என்பர், கன்னியர் நாளும் துன்னமர் கண்ணார் கோயிலே' எனச் சம்பந்தர் தேவாரம் இவ்வரலாற்றைக் கூறுகின்றது. வாமனாவதாரம் செய்த திருமாலும் இங்கு வழிபட்டனர். அதனையே 'குறுமாணக்குடி.' என்னும் பெயர் சுட்டுகின்றது. 'மறுமாண் உருவாய் மற்று இணையின்றி வானோரைச் செறுமாவலிபாற் சென்று உலகெல்லாம் ஆளவிட்ட குறுமாண்உருவன் தற்குறியாகக் கொண்டாடும் கறுமாகண்டன் மேயது கண்ணார் கோயிலே' எனச் சம்பந்தர் தேவாரத்தில் வருதல் காணலாம். சுவாமி கண்ணாயிரநாதர். அம்மை முருகுவளர் கோதை. தீர்த்தம் இந்திர தீர்த்தம்.

18. திருக்கடைமுடி

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்

பண் - வியாழக்குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அருத்தனை அறவனை அமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. 1

பொன்திகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்தமி ழிவைசொல இன்பமாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்கடைமுடி : இது கீழூர் கீழையூர் என வழங்குகின்றது. மாயூரம் மார்க்கத்தில் திரு நனிபள்ளிக்கு வடமேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது ஆனைதாண்டவபுரத்தில் இறங்கித் திருநின்றியூரை அடைந்தும் இங்குச் செல்லலாம். காவிரியின் கடை முடியான இடமாதலின் கடைமுடி எனப் பெற்றிருத்தல் கூடும். 'பொன் திகழ் காவிரிப் பொருபுனல் சீர் சென்றடை கடைமுடி' எனச் சம்பந்தர் தேவாரம் இதனைக் குறிப்பிடுதல் இங்குக் கருதத் தகும். பிரமன் பூசித்துப் பேறு பெற்றது. சுவாமி கடைமுடிநாதர். அம்மை அபிராமியம்மையார்.

19. திருநின்றியூர்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர்

பண் - நட்டபாடை [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடுநீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலினொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்நிலை யோர்க்கே. 1.

குன்றம்மது எடுத்தானுடல் தோளும்நெரி வாக
நின்றங்கொரு விரலாலுற வைத்தான்நின்றி யூரை
நன்ஞூர்தரு புகலித்தமிழ் ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லாக்குறை வின்றிநிறை புகழே. 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் - தக்கேசி [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

திருவும் வண்மையும் திண்டிறல் அரசும்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு

மருவு கோச்செங்க ணன்றனக் களித்த
வார்த்தை கேட்டுநுன் மலரடி அடைந்தேன்

பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்

தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டும் தென்திரு நின்றியூ ரானே.

1. திருநின்றியூர். இது ஆனைதாண்டவபுரம் நிலையத்தில் இருந்து வடகிழக்கே மட்சாலையில் 2 கல் தொலைவில் உள்ளது. இஃது இலக்குமி பூசித்த தலமாதலின் திரு நின்றியூர் எனப் பெயர் பெற்றது. பூம்புகாரினின்றும் அத்தயாம தரிசனத்துக்கு நியமமாகச் செல்லும் ஒரு சோழ னுக்கு திரி (தீவர்த்தி) நின்று சிவலிங்கப் பேரொளி தோன்றிய காரணத்தால் திரிநின்றவூர் என்பது மருவி வழங்கப்படுவதாகவும் தலவரலாறு கூறும். அப்பர் சம்பந் தர் சுந்தரர் பாடல், பதிகங்கள் 4. சுவாமி மகாலட்சுமிநாதர். அம்மை உலகநாயகி.

20. திருப்புன்கூர்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்

பண் – தக்கராகம் [1–ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்.

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனர் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. 1

மாட மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் - தக்கேசி [7-ம்திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே. 4

திருச்சிற்றம்பலம்

20 திருப்புன்கூர் : 'திருநாளைப்போவார்' என்னும் நந்தனர் பொருட்டு இறைவன் நந்தி தேவரைச் சற்றே விலகியிருக்கும்படிச் செய்த தலம். திருக்கோயிலின் மேற்பால் நந்தனர் அகழ்ந்து திருப்பணி செய்த திருக்குளம் இன்றும் உள்ளது. அவர் அவதரித்த ஆதனூர் இதற்குத் தென் கிழக்கில் 2 கல் தொலைவில் இருக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைத் தூது அனுப்பியது கேட்டு அவரை வெறுத்துப் பின்பு இறைவனல் அவருடைய நண்பராகப் பெற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனர் 'அதிகமாயின திருப்பணி அநேகமும் செய்த' அபிமானத் தலம் இது. இந் நாயனரின் தலமாகிய திருப்பெருமங்கலம் இதற்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. வைத்தீசுவரன் கோயிலின் (புள்ளிருக்கு வேளூர்) தென்மேற்கில் 2 கல் தொலைவில் உள்ள இத்தலத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர் கோன் கலிக்காமருடன் சென்று தரிசித்து மகிழ்ந்தார். சுவாமி சிவலோகநாதர். அம்மை சொக்கநாயகி. இத்தலத் தையும் திருநீடுரையும் ஒரே பதிகத்துட் சேர்த்து அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகம் அருளிச் செய்துள்ளார்.

21. திருநீடூர்

சுந்தரமூர்த்தி நாயனுர்

பண்–தக்கேசி [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை
ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானைக்
கார தார்கறை மாமிடற் ருனைக்
கருத லார்புரம் மூன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளும்
நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற
பரம னைப்பணி யாவிட லாருமே

திருச்சிற்றம்பலம்

21 திருநீடூர் : இது 'செல்வம் நீடு ஊர்' எனவும், 'புகழ் நீடு ஊர் எனவும் 'திரு நீடு ஊர்' எனவும் பலவாறு பொருள் விரித்துப் போற்றப் பெற்ற சிறப்புடையது. எக்காலத்தும் அழிவு இன்றி நீடியிருந்து விளங்குதலின் நீடூர் எனப் பெயர் பெற்றது எனவும் கொள்ளலாம். இது வகுளாரண்யம், மகிழவளம் எனவும் தலவிருட்சம் பற்றி வழங்கப் பெறும். முனையடுவார் நாயனுர் அவதாரத் தலம். சுந்தரர் இவ்வழியே செல்லுங்கால் இதனைப் பணியாது சென்று பின்பு இறையருள் நினைப்பூட்ட நினைந்து இங்கு வந்து பணிந்து மகிழ்ந்தார். இது பற்றியே அவர் 'நீடூர்ப் புனிதனைப் பணியாவிடலாமே ?' என வியந்து வினவும் முறையில் பாடல்களை அருளிச் செய்துள்ளார். இந்திரன் சந்திரன் தன்மசுதன் காளி முதலினோர் வழிபட்டு உயர்ந்த தலம். சந்திரபுட்கரணி இந்திர தீர்த்தம் முதலிய 9 தீர்த்தங்கள் இங்குள்ளன. சுவாமி அருட்சோமநாதர், கான நிருத்த சங்கரர். அம்பிகை வேயுறு தோளியம்மை, அதிகாந்தியம்மை. நீடூர் என்னும் இருப்புப்பாதை நிலயத்திற்கு வடமேற்கு ஒரு கல் தொலைவில் உள்ளது. சுந்தரர் பாடல் ஒரு பதிகம்.

22. திரு அன்னியூர்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர்

பண்-குறிஞ்சி [1-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர் மன்னு சோதியே. 1

பூந்தராய்ப் பந்தன், ஆய்ந்த பாடலால்
வேந்தன் அன்னியூர் சேர்ந்து வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்

22. திரு அன்னியூர்: இது 'பொன்னூர்' என்று வழங்குகின்றது. வருணன் பூசித்தது. திருநீடூரினின்று மேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. சுவாமி ஆபத்சகாய ஈசுவரர். தேவி பெரியநாயகி. தீர்த்தம் வருண தீர்த்தம்.

23. திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர்

பண்-சாதாரி [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனற்
கங்கையை ஒருசடைமேல்
தாங்கினர் இடுபலி தலைகல
னக்கொண்ட தம்மடிகள்
பாங்கினல் உமையொடும் பகலிடம்
புகலிடம் பைம்பொழில் சூழ்
வீங்குநீர்த் துருத்தியார் இரவிடத்
துறைவர்வேள் விக்குடியே. 1

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனர்

(மூப்பதுமில்லை) பண்–நட்டராகம் [7–ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்சிந் திக்கினல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்தியெங் கோனரை மேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாமிவர்க் காட் படோமே. 1

திருச்சிற்றம்பலம்

23. திருவேள்விக்குடி : இத்தலம் மாயூரத்தையடுத்த குத்தாலம் நிலையத்தில் இருந்து வடகிழக்கே 2 கல் தொலை வில் உள்ளது. இது சிவபெருமானது திருமண வேள்வி நடந்த தலம். 'திருவேள்விக்குடிச் செழுந்திரு மணவாளநற் கோலம்' என்பர் சேக்கிழார் சுவாமிகள். திருத்துருத்தி யோடு சேர்த்துச் சம்பந்தராலும் சுந்தரராலும் பாடப் பெற்றுள்ளது. பகற்காலத்தில் வேள்விக் குடியிலும் இரவு திருத்துருத்தியிலும் சிவபெருமான் எழுந்தருளியிருப்ப தாகப் பதிகங்கள் கூறுகின்றன. சுவாமி கலியாண சுந்தரர். தேவி பரிமளகந்த நாயகி,

24. திரு எதிர்கொள்பாடி

சுந்தரமூர்த்தி நாயனர்

பண்–இந்தளம் [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மத்தயானை ஏறிமன்னர் சூழவரு வீர்காள்
செத்த போதில் ஆருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடை வோமே. 1

திருச்சிற்றம்பலம்

24. திரு எதிர்கொள்பாடி: இது மேலைத் திருமணஞ் சேரி எனப்படும். மணக்கோலத்தோடு வந்த அரச குமாரன் ஒருவனை இறைவர் மாமனார் போலக் காட்டி எதிர்கொண்டு அழைத்துச் சென்றதனால், எதிர்கொள் பாடி எனப் பெயர் எய்தியது. ஐராவதம் பூசித்த தலம். சுவாமி ஐராவதேசுவரர். அம்மை மலர்க்குழல் நாயகி. வேள்விக் குடியினின்று வடக்கே கரைவழியாய் 1½ கல் தொலைவில் இருக்கின்றது. 'மத்தயானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள் செத்தபோதில் ஆரும் இல்லை சிந்தை யுள்வைம்மின்கள்' எனச் சுந்தரர் பாடிய திருப்பதிகம் பெற்றது.

25. திருமணஞ்சேரி

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - இந்தளம் [2-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அயிலாரும் அம்பதனாற்புர மூன்றெய்து
குயிலாரும் மென்மொழி யாளொரு கூறுகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கில்லை பாவமே. 1

கண்ணாரும் காழியர் கோன்கருத் தார்வித்த
தண்ணார்சீர் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

25. திருமணஞ்சேரி: மன்மதன் பூசித்துப் பேறு பெற்ற தலம். வணிகப் பெண்கள் இருவர் தங்கள் சந்ததி களுள் கொண்டும் கொடுத்தும் சம்பந்தம் செய்து கொள்ள உடன்பட்டிருக்க, ஒருத்தி வயிற்றிற் பிறந்தது ஆமையாக இருக்கக் கண்டு மற்றவள் பெண் கொடுக்க மறுக்கவே, அந்த ஆமை பூசித்து மனித உருவம் பெற்று அப்பெண்ணை மணக்கும் பேறு பெற்றதனால், இஃது இப்பெயர் எய் திற்று. சுவாமி அருள்வள்ளல் நாதர். அம்மை யாழினும் மென்மொழியம்மை.

26. திருக்குறுக்கை வீரட்டர்.

திருநாவுக்கரசு நாயனார்

திருநேரிசை [4 - ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தழைத்ததோ ராத்தியின்கீழ்த் தாபர மணலாற்கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்துகொண்
டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு
மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுதமீந்தார் குறுக்கைவீ ரட்டனாரே. 1

திருச்சிற்றம்பலம்

26. திருக்குறுக்கை: இத்தலம் மாயூரத்துக்கு வடக்கேயுள்ள நீடூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து வடமேற்கே சுமார் 5 கல் தொலைவில் உள்ளது. கடுக்கா மரம் தலவிருட்சம் ஆதலின் கடுவனம். இறைவன் அம்மையைப் பிரிந்து யோகம் புரிந்ததனால் யோகீசபுரம்; காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம்; மூர்க்கவாகு முனிவர் இத்தலத்திற்கு வந்து இங்குள்ள தீர்த்தத்தினைப் புறக்கணித்து, இறைவனை அபிடேகித்தற்குக் கங்கா நீரினை விரும்பித் தனது கரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமையால் குறுக்கை எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. இஃது அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. இறைவன் மன்மதனை எரித்த வீரச் செயலை நிகழ்த்திய தலம்.

தேவர்கள் வற்புறுத்தித் தூண்டி அனுப்பியபடி, யோக நிலையில் இருந்த இறைவன்மீது மலர் அம்பு எய்து மயக்கி யோகத்தைக் கலைக்க மன்மதன் வருகின்றான். அவன் வரும் கருத்தை யுணர்ந்த இறைவன், அந்தோ! நாம்

விழித்து நோக்கின் இவன் அழிந்து படுவனே! என மனம் இரங்கி மேற்குத் திசை திரும்பினர். ஊழிற் பெரு வலி யாவுள? முன் புறம் சென்ருல் நான் அழிந்தொழி வேன் என எண்ணி, மறைந்திருந்து மலரம்பு எய்ய மன்மதன் மேற்குத் திசை வந்தான். இறைவன் சிறிதே புன்முறுவல் பூத்து, நெற்றி விழியால் நோக்கினர். மன்மதன் அஞ்சி நடுங்கிச் சிறிது தென்புறம் ஓடினன். நுதல்விழிச் செந்தீ நேருறப்பட்டது. மன்மதன் உடல் எரிந்து சாம்பர் ஆயிற்று. அவன் இரதம் கொடி முதலி யனவும் அழிந்தன.

மன்மதன் பாணம் எய்வதைப் பார்க்கவந்த தேவர் கள் கூடியிருந்த இடம் தேவனூர் எனவும், மன்மதன் இறைவனை மலரம்பால் மயக்கித் திரும்புவேன் எனக் கங்கணம் கட்டிய இடம் கங்கணம் புத்தூர் எனவும், தன் கரும்பு வில்லை வளைத்த இடம் வில்லிய நல்லூர் எனவும், கால் வளைத்துக் குறிபார்த்த இடம் கால்வளை மேடு (காவாள மேடு) எனவும், பஞ்சபாணம் எய்யா நின்ற இடம் பஞ்சபாண நல்லூர் ஐவாள் நல்லூர்) எனவும், சோர்ந்து வீழ்ந்த இடம் சோத்தமங்கலம் எனவும் கூற்று வன் வசித்த இடம் கூற்றுவன் வாழ்க்கை (கூத்தூர்வாழி) எனவும், சிவபிரானின் இவ்வீரச் செயலை யுணர்த்தும் இனிய சான்றுகளாக இன்றும் விளங்கி வருகின்றன.

சுவாமி கர்ப்பகிருகம் வடபுறத்தில் காமன் தேரில் வருதல், பாணம் எய்தல், இறைவன் யோகத்தில் இருத்தல் முதலிய காம தகன வரலாற்றுச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள விநாயகருக்குக் குறுங்கை விநாயகர் என்று பெயர், பிரமன் விஷ்ணு இந்திரன் இரதி மன் மதன் காளி துர்க்கை முருகன் அகத்தியர் முதலிய பலர் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றனர். சூலதீர்த்தம் ஞான தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இங்கு உண்டு.

திருநாவுக்கரசர் அருளிய இரண்டு திருப்பதிகங்கள் இதற்கு உண்டு. அவற்றுள் ஒவ்வொரு பாடலும் மிகச் சுவையும் சிறப்பும் வாய்ந்தவை. பிரமதேவர் மார்க்கண்டேயர், சண்டேசுரர், கோச்செங்கட் சோழர், திருமால், சாக்கிய நாயனர், கண்ணப்பர், மகாபலி, கணம்புல்ல நாயனர், இராவணன், அருச்சுனன் முதலிய பலரும் வழிபட்டு அருள் பெற்ற செய்திகளும் அட்டமி முன்சீருடை ஏழுநாளும் இறைவன் கூத்தராய் வீதி போந்த மாட்சியும் ஆகியவை பற்றி, இப்பதிகங்கள் இனிதெடுத்துப் பாடியுள்ளன. மகா வித்துவான் மீனட்சி சுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணம் ஒன்றும், இதற்கு உண்டு.

தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்தில் விளங்கி வரும் இக்கோயிலில், காரண காமிக ஆகமப்படி நாடோறும் நான்கு கால பூசைகள் நிகழ்ந்து வருகின்றன. சுவாமி வீரட்டேசுவரர், யோகீசுவரர். அம்மை; ஞானம்பிகை, பூரணியம்மையார்.

27. திருக்கருப்பறியலூர்

திருவிராகம் - பண் - இந்தளம் [2 - ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

திருச்சிற்றம்பலம்

சுந்தர மூர்த்தி நாயனார்

பண் - நட்டராகம் [7-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
    வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவின் உரிவைபோர்த் துமைவெருவக்
    கண்டானைக் கருப்ப றியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
    மயிலாடுங் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோ
    தவர்நமக் கினிய வாறே. 1.

திருச்சிற்றம்பலம்

27. திருக்கருப்பறியலூர் : இது மேலைக் காழி என்றும் தலைஞாயிறு என்றும் வழங்கும். திருப்புன்கூரினின்றும் மேற்கே மட்சாலை வழியில் மண்ணிப்பள்ளத்தை அடைந்து அதன் வடக்கே அரைகல் தொலைவில் இத்தலத்தைச் சேரலாம். திருநாரையூரினின்று கொள்ளிடத்தைக் கடந்து திருக்குரக்குக்கா சென்று அங்கிருந்தும் இதற்கு வரலாம். சம்பந்தரும், அப்பரும் இவ்வழியாகவே இத் தலத்தை அடைந்தனர். வழி கடினமாயினும், தொலைவிற் குறுகியது. இந்திரன் ஒரு காலத்தில் அகந்தையினுடன் கயிலைக்குச் சென்றபோது, சிவபெருமான் ஓர் இயக்க வடிவினுடன் தோன்ற அவரை அறிந்து கொள்ள மாட்டாதவனாய் இந்திரன் அவரை எதிர்த்துப் போர் செய்ய முற்பட்டான், பின்னர் உண்மையுணர்ந்து பணிந்து, மன்னிக்கப்பெற்றான். அதனால் சுவாமி குற்றம் பொறுத்த நாதர். அம்மை-கோல்வளை நாயகி. தீர்த்தம் இந்திர தீர்த்தம்.

சென்று வழிபடுபவர்களின் கரு அல்லது பிறப்பு இங்கு பறிக்கப்படுதலால், கருப்பறியலூர் எனக் காரணப் பெயர் பெற்றது. சம்பந்தரும் சுந்தரரும் பாடியதலம். இங்குள்ள கோயிலைச் சுந்தரர் கொகுடிக் கோயில் எனக் குறிப்பிட்டுள்ளார். தலவிருட்சம் கொகுடி. (ஒருவகை முல்லைக் கொடி)

28. திருக்குரக்குக்கா

திருநாவுக்கரசு நாயனர்

திருக்குறுந்தொகை [5- ந் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடும் குற்றமே. 1

திருச்சிற்றம்பலம்

28. திருக்குரக்குக்கா : இது திருக்கருப்பறியலூரி லின்றும் வடக்கே $\frac{1}{3}$ கல் தொலைவில் உள்ளது. "குரக்கினம் குதிகொள்ளும் குரக்குக்கா" என அப்பர் சுவாமிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இஃது அநுமான் பூசித்த தலம் எனக் கூறுவர். சுவாமி குந்தளேசுவரர்· அம்மை குந்தள நாயகி. அப்பர் பாடல், ஒரு பதிகம்.

29. திருவாழ்கொளிப்புத்தூர்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்

பண்-தக்கராகம் [1-ந் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடை யூர்திரிந்தையங் கொண்டு பலபலகூறி
வடிவுடை வாள்நெடுங் கண்ணுமைபாகம்
ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம். 1

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் – தக்கேசி [7-ந் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தலைக்க லன்றலை மேல்தரித் தானைத்
தன்னை என்னை நினைக் கத்தரு வானைத்

கொலைக்கை யானையுரி போர்த்துகந் தானைக்
கூற்று தைத்தகுரை சேர் கழலானை

அலைத்த செங்கண்விடை ஏறவல் லானை
ஆணையால் அடியேன் அடிநாயேன்

மலைத்த செங்நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனே. 1.

திருச்சிற்றம்பலம்

29. திருவாழ்கொளிபுத்தூர் : இதனைத் திருவாளொளி புத்தூர் எனவும் திருவாளப்புற்றூர் எனவும் வழங்கு கின்றது. இத்தலம் திருப்புன்கூரினின்றும் மண்ணிப் பள்ளத்தை அடைந்தால், மேற்கே $1\frac{1}{4}$ கல் தொலைவில் உள்ளது. திருமால் வழிபட்ட மாணிக்க லிங்கத்தை யுடைமையால் வடமொழியில் அரதனபுரம் எனவும் பெயர் பெறும். "வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே?" என்று சுந்தரர் தம்து பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் அருளிச் செய்துள்ளார். இறை வன் அருச்சுனனின் வாளைப் புற்றில் ஒளித்து வைத்துப் பின்னர் அருள் புரிந்தமையின் வாள் ஒளி புற்றூர் எனப் பெயர். அமைந்தது எனத் தலவரலாறு கூறும். சம்பந்தர், சுந்தரர்பாடல், பதிகங்கள் 3. சுவாமி மாணிக்க வண்ணர். தேவி வண்டமர் பூங்குழலி.

30. திருப்பழமண்ணிப் படிக்கரை

சுந்தரமூர்த்தி நாயனர்

பண் – நட்டராகம் [7-ந் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள்பிரான் முதல்
காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள் பிரான் திரு
நீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள் பிரான் மறை
நான் குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்க்ள்பிரான் பழ
மண்ணிப் படிக்கரையே.

திருச்சிற்றம்பலம்

30. **திருப்பழமண்ணிப்படிக்கரை :** இஃது இலுப்பைப் பட்டு என வழங்கும். இத்தலம் திருவாழ்கொளிபுத்தூரினின்றும் மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. இங்குச் சிவபெருமான் ஆலாலநஞ்சையுண்ட காலத்தில் அம்பிகை அஞ்சிக் கண்டத்தைக் கரத்தால் பற்றி நஞ்சை உள்ளே போகாமல் தடுத்து நிறுத்தியதனல் சிவபெருமான் திருநீல கண்டம் காட்டியருளினர். 'திருநீலமிடற்று எம்பிரான்' எனச் சுந்தரர் பாடலில் வருதல் காணலாம். பாண்டவர் பூசித்த சிவலிங்கங்கள் ஐந்து இங்கே இருக்கின்றன. சுவாமி நீலகண்டர் அம்மை அமிர்தகரவல்லி.

31. திருப்பந்தணை நல்லூர்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர்

பண் – புறநீர்மை [3 -ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

இடறினர் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
இவை சொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினு ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனர் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணம் கொண்டுகூத் தாடும்
படிறனர் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதி யாரே.

திருச்சிற்றம்பலம்

திருப்பந்தணை நல்லூர் : இது அம்பிகை ஆடிய பந்து அணைந்த காரணம்பற்றி இப்பெயர் எய்தியது. தேவ கன்னியரும், தேவப்பசு முதலியவும் பூசித்தன. சுவாமி பசுபதீசுவரர். தேவியார். காம்பனதோளியார். விருட்சம். கொன்றை. பதிகம் 2.



Amurtha Printers, Madras-24.